## அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அருளிச் செய்த
# ப்ரமேய ஸாரம்

### ப்ரமேய ஸாரம் தனியன்

நீங்காமல் என்றும் நினைத்துத் தொழுமின்கள் நீணிலத்தீர்
பாங்காக நல்ல பிரமேய ஸாரம் பரிந்தளிக்கும்
பூங்கா வளம் பொழில் சூழ் புடை வாழும் புதுப்புளி மண்
ஆங்காரமற்ற அருளாள மாமுனி அம் பதமே

## அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அருளிச் செய்த
# ப்ரமேய ஸாரம்

* அவ்வானவருக்கு மவ்வானவர் எல்லாம்
உவ்வானவர் அடிமை என்றுரைத்தார் - இவ்வாறு
கேட்டிருப்பார்க்கு ஆளென்று கண்டிருப்பார் மீட்சியிலா
நாட்டிருப்பார் என்றிருப்பன் நான் 1

குலம் ஒன்று உயிர் பல தம் குற்றத்தால் இட்ட
கலம் ஒன்று காரியமும் வேறாம் - பலம் ஒன்று
காணாமை காணும் கருத்தார் திருத்தாள்கள்
பேணாமை காணும் பிழை 2

பலங்கொண்டு மீளாத பாவம் உளதாகில்
குலங்கொண்டு காரியம் என் கூறீர் - தலங்கொண்ட
தாளிணையான் அன்றே தனை ஒழிந்த யாவரையும்
ஆளுடையான் அன்றே அவன் 3

கருமத்தால் ஞானத்தால் காணும் வகை உண்டே
தருமத்தால் அன்றி இறை தாள்கள் - ஒருமத்தால்
முந்நீர் கடைந்தான் அடைந்தான் முதல் படைத்தான்
அந்நீர் அமர்ந்தான் அடி 4

வழியாவது ஒன்றென்றால் மற்றவையும் முற்றும்
ஒழியாவது ஒன்றென்றாலோம் என் - றிழியாதே
இத்தலையால் ஏதுமிலை என்றிருந்தது தான்
அத்தலையால் வந்த அருள் 5

உள்ளபடி உணரில் ஒன்று நமக்கு உண்டென்று
விள்ள விரகிலதாய் விட்டதே - கொள்ளக்
குறை ஏதும் இல்லார்க்குக் கூறுவதென் சொல்லீர்

இறை ஏதும் இல்லாத யாம் 6

இல்லை இருவர்க்கும் என்றிறையை வென்றிருப்பார்
இல்லை அஃதொருவர்க்கு எட்டுமதோ - இல்லை
குறை உடைமை தான் என்று கூறினார் இல்லா
மறை உடைய மார்க்கத்தே காண் 7

வித்தமிழ இன்பம் துன்ப நோய் வீகாலம்
தத்தம் அவையே தலை அளிக்கும் - அத்தை விடீர்
இச்சியான் இச்சியாது ஏத்த எழில் வானத்து
உச்சியான் உச்சியானாம் 8

தத்தம் இறையின் வடிவென்று தாளிணையை
வைத்தவரை வணங்கியிரா - பித்தராய்
நிந்திப்பார்க்கு உண்டேறா நீணிரயம் நீதியால்
வந்திப்பார்க்கு உண்டிழியாவான் 9

* இறையும் உயிரும் இருவர்க்கும் உள்ள
முறையும் முறையே மொழியும் - மறையை
உணர்த்துவாரில்லா நாள் ஒன்றல்ல ஆன
உணர்த்துவார் உண்டான போது 10

**அருளாளப் பெருமாள் எம்பெருமானார் திருவடிகளே சரணம்**